மேல்மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் செயற்றிட்டம்

முன்னோடி பரீட்சை - 2016

வினாத்தாள் - 6

பகுதி - 1

காலம் : 45 நிமி

சுட்டெண் : .....

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 – 40 வரையிலான வினாக்களுக்கான மிகப்பொருத்தமான விடையை தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.

1ஆம் 2ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் பொருத்தமற்ற உருவின் கீழ் கோடிடுக.

01.



1)



2)



3)

02.



1)




2)



3)

03. முதலில் தரப்பட்டுள்ள உருவைப் பூர்த்தி செய்வதற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.



1) 2) 3)

04. எல்லா சொற்களுக்கும் பொருந்தக்கூடிய உருவைத் தெரிவுசெய்க.

(தாவர உண்ணி, நான்கு கால், நிலத்தில் வாழும், குட்டியீனும்)



1)



2)




3)


05. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

6	8	10
4	2	12
?	16	14


1. 10



2. 18



3. 20





1) 14 2) 25 3) 21

PIRASANNA www.lkedu.lk

❖ தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானித்து வெற்றிடத்துக்கு பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

07. 

1) 
2) 
3) 

08. 

1) 
2) 
3) 


09. சியாம் சியானாவின் மகன் ஆவான். சியாமின் அப்பா நசார் ஆவார். நசாரின் மகள் பாத்திமா ஆவாள். பாத்திமா சியானாவிற்கு என்ன உறவுமுறை?

1. பேத்தி 2. மகள் 3. மருமகள்

10. நசார் சியானாவிற்கு என்ன உறவுமுறை?

1. கணவன் 2. பேரன் 3. மாமா

❖ பழங்கள் விரும்பும் மாணவரின் தரவுகள் பற்றிய விபரம் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது.



11. மூன்று பழங்களையும் விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை

1. 3 2. 7 3. 1

12. வாழைப்பழம் மாத்திரம் சாப்பிட விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

1. 6 2. 1 3. 3

❖ பின்வரும் கவிதையை வாசிக்க.

பருவம் பார்த்து நாங்கள்

பயிரைச் செய்தல் போலக்

கருமந் தொடங்கும் போது


..... பார்க்க வேண்டும்.

PRASANNA
www.lkedu.lk

13. கவிதையில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

1. நேரம் 2. காலம் 3. வாரம்

14. இவ்வுருவின் நிழற்றப்பட்ட பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?



1. $\frac{1}{6}$ 2. $\frac{1}{4}$ 3. $\frac{1}{3}$

❖ உவமானத்திற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

15. அடியற்ற மரம் போல்

1. சுயநினைவற்ற நிலை 2. ஆதரவற்ற நிலை 3. பகைமையான நிலை

16. பின்வரும் கருத்தைத் தரும் பழமொழியைத் தெரிவுசெய்க.

'கோபம் சிந்தனைக்கு இடையூறாக இருக்கும்'

1. ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்.
2. கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
3. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

17. மே மாதம் 03ஆம் திகதி புதன்கிழமை ஆயின் அம்மாதத்தின் இறுதி புதன்கிழமை எத்தனையாம் திகதி?

1. மே 24 2. மே 30 3. மே 31

18. பண்ணை ஒன்றில் உள்ள மாடுகளினதும், கோழிகளினதும் கால்களின் எண்ணிக்கையின் கூட்டுத் தொகையாக அமையாதது.

1. 29 2. 22 3. 28

❖ 2016ஆம் வருடம் 21ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திற்குரியதாகும். இத்தகவலை கொண்டு பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.

19. அவ்வாறாயின் 1975ம் வருடம் உரித்தாவது,

1. 20ஆம் நூற்றாண்டின் 7ம் தசாப்தத்திற்கு
2. 20ஆம் நூற்றாண்டின் 8ம் தசாப்தத்திற்கு
3. 19ஆம் நூற்றாண்டின் 7ம் தசாப்தத்திற்கு

20. 21ஆம் நூற்றாண்டின் 8ஆவது தசாப்தத்திற்கு உரித்தான வருடம்

1. 2063 2. 2075 3. 2082

21. கம்பி ஒன்றை நான்காக மடித்து சதுரம் ஒன்றை செய்த போது அதன் ஒரு பக்க நீளம் 6 cm எனின் அதே கம்பியை மூன்றாக மடித்து சமபக்க முக்கோணி ஒன்றை செய்தால் அதன் ஒரு பக்க நீளம் யாது?


1. 6 cm 2. 8 cm 3. 7 cm

22. சீதா கீதாவிலும் உயரங்கூடியவர். மீனா சீதாவிலும் உயரங் கூடியவர். இம்மூவரும் உயர அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்தினால் அமையும் சரியான விடை.

1. சீதா, கீதா, மீனா 2. கீதா, மீனா, சீதா 3. கீதா, சீதா, மீனா

PRASANNA www.1kedu.lk

23. நிழற்றப்பட்ட பகுதி, முழு உருவின்



1. $\frac{1}{2}$இலும் குறைவாகும்.
2. $\frac{1}{2}$இற்கு சமன்
3. $\frac{1}{2}$இலும் கூடியதாகும்.

24. அப்பா கொண்டுவந்த கேக்கில் இருந்து $\frac{1}{4}$பகுதியை வைத்துக் கொண்டு மற்றையதை 3 சம பகுதிகளாகப் பிரித்து தனது 3 பிள்ளைகளுக்கும் கொடுத்தார். ஒருவருக்கு கிடைத்த பகுதி யாது?

1. $\frac{1}{3}$ 2. $\frac{2}{4}$ 3. $\frac{1}{4}$

25. குமாரன் வயது 10. நிஸாரின் வயது குமாரின் வயதின் இரண்டு மடங்கிலும் 2 வருடம் குறைவு ஆகும். இன்னும் 5 வருடங்களில் இருவரினதும் வயதும் முறையே,

1. குமாரின் வயது 15, நிஸாரின் வயது 18
2. குமாரின் வயது 20, நிஸாரின் வயது 15
3. குமாரின் வயது 15, நிஸாரின் வயது 23

26. 400இன் அரைவாசியுடன் 100ஐக் கூட்டி 100ஐக் கழித்தால் கிடைக்கும் விடை.

1. 200 2. 100 3. 300

27. ஜூன் 1ம் திகதி தொடக்கம் ஜூன் 6ஆம் திகதி வரை கண்காட்சி ஒன்று நடைபெற்றது. அக்கண்காட்சி நடைபெற்ற நாட்களின் எண்ணிக்கை யாது?

1. 5 2. 6 3. 7

28. பின்வரும் தொடர்பு சரியாவதற்கு கூடுகளில் வரவேண்டிய கணிதக் குறியீடுகள்

10 ☐ 10 ☐ 10 = 10

1. +, - 2. X, - 3. + , X

29. A, B என்னும் இரண்டு இயந்திரங்கள் உள்ளன. A ஆனது ஒரு நிமிடத்துக்குள் ஒரு பொருளையும்,B ஆனது அதே நிமிடத்தில் இரண்டு பொருட்களையும் உற்பத்தி செய்கின்றன. இதன்படி சரியான கூற்று

1. A யை விட B வேகம் கூடியது.
2. B யை விட A வேகம் கூடியது
3. Aயும்,Bயும் சமனான வேகம் உடையது.

30. ஒரு மனிதன் 20m முன்னோக்கிச் சென்று, வலதுகை பக்கம் திரும்பி 20m சென்று, மீண்டும் வலதுகைப் பக்கம் திரும்பி, 20m சென்று மீண்டும் வலதுகைப் பக்கம் திரும்பி 20m சென்று நின்றான்.

இத்தகவலுக்கமைய சரியான கூற்று

1. இம்மனிதன் பயணத்தை ஆரம்பித்த இடத்திலேயே பயணத்தை நிறைவு செய்துள்ளார்.
2. இம்மனிதன் பயணத்தை ஆரம்பித்த திசைக்கு எதிர்த்திசையில் பயணத்தை நிறைவு செய்துள்ளார்.
3. இம்மனிதன் பயணத்தை ஆரம்பித்த இடத்திற்கும், நிறைவுசெய்த இடத்திற்கும் இடையிலான தூரம் 15m ஆகும்.

PRASANNA www.lkedu.lk

31. அவன் பயணித்த தூரம்.

1. 100m 2. 80m 3. 40m

32. ஒருவருக்கு 7 நாட்களுக்கு ஒருமுறை விடுமுறை கிடைக்கும். அவ்வாறாயின் அவருக்கு ஒரு வருடத்தில் ஒரு வருடத்தில் கிடைக்கும் விடுமுறை நாட்களின் எண்ணிக்கை.

1. 52 2. 47 3. 44

33. கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒரு கோலம் உண்டாவதற்கு சேர்க்கப்பட வேண்டிய எண் யாது?

9, 16, 23, 37, 44 .....

1. 30 2. 29 3. 36

34. ..... 47, 51, 56, 62, 69,..... வெற்றிடத்துக்குப் பொருந்தும் எண்கள் முறையே

1. 45, 78 2. 44, 77 3. 44, 78

35. எங்கள் குடும்பத்தில் அப்பாவிற்கு இரு மகன்கள் உள்ளனர். அம்மாவுடன் இரு பெண்கள் உள்ளனர். எமது குடும்பத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது?

1. 5 2. 4 3. 6

36. சுற்றளவு 50cm ஐ உடைய உருவைத் தெரிவுசெய்க.

1) 17 cm
8 cm

2) 13 cm
11 cm

i 3) 15 cm
8 cm

37. 10 cm
5 cm

இவ்வுருவின் பரப்பளவிற்கு பொருத்தமான உரு

35 cm
15 cm
1)

25 cm
2 cm
2)

15 cm
2 cm
3)

38. ரூபாய் 9860 பெறுமதியுள்ள பொருள் SCPMஎன்னும் இரகசியக் குறியீடு மூலம் குறிக்கப்பட்டிருந்தது. இப்பொருள் திடீரென விலை ஏற்றம் பெற்றதன் காரணமாக கடை முதலாளி முன்னைய விலையிலும் ரூ 40 அதிகரிக்கப்பட்டுள்ளதை பொருளின் கீழ் குறிப்பிட்டிருந்தார். தற்போது பொருளின் விலை குறிக்கப்பட்டிருக்கும் இரகசியக் குறியீடு யாது?

1. SSMM 2. SSZM 3. ZZMS

❖ கீழே தரப்பட்டுள்ள அடைப்பில் காட்டப்பட்டுள்ள ABCD எனும் எழுத்துக்களுக்கு இலக்கங்களின் பெறுமதி வழங்கப்படும்போது Aயின் இரு மடங்கு Bஆகும். Bயின் இரு மடங்கு Cஆகவும்,Cஇன் இரு மடங்கு Dஆகவும் அமையும். அப்பெறுமதி Eக்குச் செல்லும் போது அரைவாசியாகக் குறைவடையும். Eஇலிருந்து Hவரை செல்லும்போது 10இன் 10ஆகக் குறைவடையும்.

39. Aஇன் பெறுமதி 20 எனின் Dயின் பெறுமதி யாது?

1. 160 2. 150 3. 140

40. Aஇன் பெறுமதி 15 எனின் Gயின் பெறுமதி யாது?

1. 40 2. 50 3. 60

PIRASANNA www.lkedu.lk

மேல்மாகாணக் கல்விக் கிணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் செயற்றிட்டம்

முன்னோடி பரீட்சை - 2016

வினாத்தாள் - 6

பகுதி - 11

சுட்டெண் : ..... காலம் : 1மணி 15 நிமி

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை தருக.

01. அம்பாந்தோட்டையில் வசிக்கும் கமலினி, அவளது நண்பிக்கு எழுதிய கடிதம் கீழே தரப்பட்டுள்ளது. இதை கவனத்திற் கொண்டு கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கமலினி குமாரசாமி
அன்னை வீதி,
அம்பாந்தோட்டை.
2016.01.02

அன்புள்ள ராணி,

நான் நலம். நீ நலமாக இருப்பாய் என நம்புகிறேன். நாங்கள் நுவரெலியா பிரதேசத்தை பார்வையிட சுற்றுலா ஒன்றை மேற்கொண்டோம். அது மிகவும் அழகான ஊராகும். ரம்பொடை, பேக்கர்ஸ் போன்ற நீர்வீழ்ச்சிகளை பார்வையிட்டோம். அது வானத்திலிருந்து வெள்ளிச்சேலை ஒன்று கீழே உருண்டு வருவதைப் போன்று தூரத்திற்கு காட்சியளித்தது. நாங்கள் ஹக்கல பூங்காவையும் பார்வையிடச் சென்றோம். அது மிகவும் இரம்மியமான சூழலாகும். அடுத்து வரும் விடுமுறையில் காசியப்ப மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க சீகிரியாவை பார்வையிடுவதற்கு தீர்மானித்துள்ளோம். அங்கு அரச மாளிகையிலுள்ள சிற்பங்களை தற்போது பார்க்கக்கூடியதாக உள்ளதாக புத்தகங்களில் கூறப்பட்டுள்ளது. அதில் கண்ணாடிச் சுவர்கள், சுவர் ஓவியங்களையும் பார்க்கத் தீர்மானித்துள்ளோம். நீங்களும் எங்களோடு இந்தப் பயணத்தில் இணைத்துக்கொள்ளவும். மேலதிக தகவல்களை பிறகு பேசுவோம்.

இப்படிக்கு,
அன்புள்ள
கமலினி

1. 'அன்புள்ள ராணி' என்பதற்கு பின்னால் வந்துள்ள நிறுத்தற்குறி யாது? .....

2. இதிலுள்ள உவமானம் ஒன்றை எழுதுக. .....

3. கமலினி பார்வையிட்ட இடங்களில் இரம்மியமாக தோன்றிய இடம் எது?

.....

4. சீகிரியாவின் சிறப்பு ஒன்று தருக. .....

5. இதிலுள்ள உயர்திணை, தன்மை, பன்மை பெயர்ச்சொல் ஒன்று தருக. .....

6. இதில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று சிறப்புமிக்க இடம் எது? .....

7. அடைமொழி ஒன்றை எழுதுக. .....

8. "புராதனம்" என்பதற்கு ஒத்த சொல் தருக. .....

9. "வானம்" என்பதற்கு எதிர்ச்சொல் தருக. .....

10. இந்த கடிதத்தை பெற்றுக்கொள்பவர் யார்? ..... (10X1=10புள்ளிகள்)

PRASANNA www.NEDUK

02. பொருத்தமாக சொற்களைச் சேர்த்து வாக்கியமாக்குங்கள்.

1. சத்தியமே/ காட்டியவர்/ காந்தியடிகள்/ கடவுள்/ என்று/ வாழ்ந்து

.....

2. மானசீக/ மட்டுமே/ வாங்கினார்/ குருவாக/ ஏகலைவனின்/ துரோணர்

.....

03. இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்க.

1. கமலாவும் விமலாவும் நிமலின் வீட்டுக்குச் ..... (சென்றனர்/ சென்றன)

2. நாங்கள் (அறும்காட்சியகத்தை/ அருங்காட்சியகத்தை) பார்வையிடச் சென்றோம்.

04. பின்வரும் பழமொழிகளின் இடைவெளிகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

1. ஆற்றிலே போட்டாலும் ..... போடு. (தெரிந்து/ அளந்து)

2. காகம் திட்டி ..... சாகாது. (யானை/ மாடு)

05. சரியான கருத்தைத் தரும் தனிச்சொல்லை தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

1. சிறைத் தண்டனை பெற்றவன் (கைதி, அநாதை)

2. நெடுங்காலம் வாழ்பவன் (சூரன், சிரஞ்சீவி)

06. கீழுள்ள கவிதையை பூர்த்தி செய்க.

பாலும் எனக்குத் தேவையில்லை
பழமும் எனக்குத் .....
சோலை எங்கும் கூவி நிதம்
..... போதுமப்பா.

- தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் இடைவெளிக்கு வரவேண்டிய சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிந்து அதன்கீழ் கோடிடுக.

07. The ..... clean the road. (Sweeper/ waiter)

08. ..... is famous for gems (Rathnapura/Colombo)

09. கீழுள்ள ஆங்கில வாக்கியங்களை தமிழில் எழுதுங்கள்.

1. Can I help you? .....

2. Don't go out. .....

10. தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

நான் கரும்பலகையைத் துப்புரவு செய்கிறேன். .....

11. தரப்பட்டுள்ள சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுங்கள்.

වෙසිකිලිය තියන්නෙ කොහෙද? .....

12. தரப்பட்டுள்ள வாக்கியத்தை சிங்களத்தில் கூறும் முறையை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

நாங்கள் விளையாடப் போவோமா? ..... (17X1=17புள்ளிகள்)

PRASANNA www.lkedu.lk

13. இலங்கையின் உயர்ந்த மலைக்குன்றிலிருந்து பாயும் மகாவலி ஆறு எமது நாட்டின் மிகப்பெரிய வளமாகும். அந்த அடிப்படையில் "மகாவலி ஆறு" பற்றி 5 சொற்களுக்குக் குறையாத 3 வாக்கியங்களை எழுதுக.

8. .....

.....

9. .....

.....

10. .....

.....

(3X2=6புள்ளிகள்)

தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய புள்ளிக் கோட்டில் விடைகளை எழுதுக.


14. தரப்பட்டுள்ள இலக்கத்தை எழுத்தில் எழுதுக.

48707 - .....

15. அடுத்து வரவேண்டிய எண்ணை எழுதுக.

1. 49, 45, 41, 37 .....

16. உருவில் நிறந்தீட்டப்படாத பகுதியை பின்னமாக எழுதுக.



.....

(3X1=3புள்ளிகள்)


17. நிமல், கமல், விமல் ஆகிய மூவரும் சம அளவான பணத்தையிட்டு ரூபாய் 12.00 பெறுமதியான 5 புத்தகங்களையும்,ரூபாய் 225.00க்கு 3 சோடி காலணிகளையும் வாங்கினார்.

1. காலணி சோடியின் விலை என்ன? .....

2. ஒருவர் செலவழித்த பணம் எவ்வளவு? .....

18. 1. தரப்பட்டுள்ள உருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது? .....

2. இதிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது? .....



19. முற்பகல் 5.15 மணிக்கு வீட்டிலிருந்து பயணித்த அப்பா பிற்பகல் 2.25 மணிக்கு காலியைச் சென்றடைந்தார். அப்பா பயணத்திற்காக செலவழித்த நேரம் எத்தனை மணித்தியாலங்கள்?

(5X2=10புள்ளிகள்

.....

PRASANNA www.1kedu.lk


20. அம்மா கடையிலிருந்து வாங்கி வந்த பொருட்களின் விலைப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. இதை நன்கு அவதானித்து இடைவெளிகளை நிரப்புக.

நிறை	பொருட்கள்	ஒன்றின் விலை	கொடுக்கப்பட்ட பணம்	
			ரூ	சதம்
2 kg	சீனி	105.00	210	00
3	பாண்	A……..	204	00
B……	டின் மீன்	98.50	197	00
2 kg	பருப்பு	C……..	370	00
மொத்தம்			D……	……

4X1=4 புள்ளிகள்

21. அண்ணாவின் பிறந்த தினம் 2001.04.27 ஆயின் 2015 மே 20ஆம் திகதி அண்ணாவின் வயது எத்தனை வருடங்கள்? ……..


22. கீழே பல அளவுகளில் நீரைக்கொள்ளும் பாத்திரங்கள் காணப்படுகின்றன.



1. Cபாத்திரத்தை நிரப்ப Dபாத்திரத்தில் எத்தனை முறை நீரை ஊற்ற வேண்டும்? ……

2. கூடுதலான நீரைக் கொள்ளும் பாத்திரத்தை நிரப்ப A பாத்திரத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டிய மற்றைய பாத்திரம் எது? ……..

23. இந்த இடத்தின் சுற்றளவு எவ்வளவு? ……




24. இவ்வுருவினுள் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ……

25. ஒரு பெட்டியினுள் 365 சட்டைகள் வீதம் 2 பெட்டிகளும், 590 சட்டைகள் வீதம் 2 பெட்டிகளும் உள்ளன. நான்கு பெட்டிகளிலும் உள்ள சட்டைகளை ஐந்தைந்தாக பொதியிடும்போது கிடைக்கக்கூடிய பொதிகள் எத்தனை? ……..

6X2=12புள்ளிகள்

❖ தோட்டமொன்றில் 5 நாட்களில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் விபரம் படவரைபில் காட்டப்பட்டுள்ளது.




26. தேங்காய்கள் பறிக்கப்பட்டுள்ள முறைக்கேற்ப சனிக்கிழமை பறிக்கப்படக்கூடிய தேங்காய்களின் அளவை வரைபில் காட்டுக.

27. குறைந்தளவு, கூடியளவு பறிக்கப்பட்ட தேங்காய்களின் வித்தியாசம் எவ்வளவு? ……


PRASANNA www.lkedu.lk

28. ஒருவர் Aநகரிலிருந்து BCDஊடாக Eநகருக்கு செல்வதற்கு செல்ல வேண்டிய தூரம் எவ்வளவு?
.....



29.  கடிகார முகத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்திற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னதான நேரத்தை உரோம இலக்கத்தில் தருக. .....

30. கீழுள்ள அட்டையைக் கொண்டு ஆக்கக்கூடிய கனவுருவைத் தெரிந்து கோடிடுக.



1. 
2. 
3. 
4. 

❖ வினா இலக்கம் 31 முதல் 60 வரையான ஒவ்வொரு வினாவுக்குமென பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளைக் கொண்டு தெரிவுசெய்து அதன்கீழ் கோடிடுக.

31. பூ பூக்காத தாவரம் ஒன்று.

1. வில்வம் 2. வேம்பு 3. மடுப்பனை 4. சூரியகாந்தி

32. வித்தின் மூலம் இனப்பெருக்கம் செய்யாத தாவரம்.

1. கறிவேப்பிலை 2. மாதுளை 3. ஈரப்பலா 4. மரவள்ளி

33. இலங்கைக்கே உரித்தான தாவரம் அல்லாதது.

1. ஆம்பல் 2. பெரும்பிரம்பு 3. நாகமரம் 4. மரமுந்திரிகை

34. எட்டுக் கால்களை கொண்ட இரத்தத்தை உறிஞ்சும் பிராணி.

1. நுளம்பு 2. வண்டு 3. உண்ணி 4. தேள்

35. சூரிய நமஸ்காரம் செய்வதனால் கிடைக்கக்கூடிய நன்மை அல்லாதது.

1. விநோதம் 2. மனத்தூய்மை 3. உடற்பயிற்சி 4. மனநிம்மதி

36. முலையூட்டி அல்லாதது.

1. காகம் 2. அழுங்கு 3. வெளவால் 4. சருகுமான்

37. பழுதடைந்த உணவின் இலட்சணமானது.

1. மிகவும் இனிமையாக இருக்கும். 2. அழகானதாக இருக்கும்
3. கடுமையான நிறமாக இருக்கும் 4. நிறம் மாறிக் காணப்படல்

PIRASANNA www.lkedu.lk

38. கமலா உணவு உட்கொண்ட பின் அது விஷமானதால் வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டாள். இதற்கான காரணமாக அமைவது.

1. பழங்களை உட்கொண்டதால்
2. மரவள்ளிக் கிழங்கை முடி அவித்ததால்
3. மரக்கறிகளையும், பழங்களையும் வெட்டியபின் கழுவி அவிப்பதால்
4. உணவுகளுக்கு தேசிக்காய் சேர்த்ததால்

39. நாற்றுமேடையில் கன்றுகளை பெறக்கூடிய தாவரங்கள் அடங்கிய தொகுதி

1. கௌபி, மிளகாய், தக்காளி
2. நோக்கோல், பூசணி, கடுகு
3. மிளகாய், தக்காளி, கத்தரி
4. நெல், கௌபி, போஞ்சி

40. உருவில் காணப்படும் உடுக்கோலம் யாது?



1. பெருங்கரடி
2. கலப்பை
3. தென்சிலுவை
4. கார்த்திகை

41. படத்தில் காணப்படுவது




1. சூரிய கிரகணம்
2. சந்திர கிரகணம்
3. வான் அவதானிப்பு
4. பௌர்ணமி தினம்

42. இவ்வுருவில் காணப்படுபவர்



1. மிகெட்டுவத்தே குணாநந்த தேரர்
2. ஹிக்கடுவே சுமங்கல தேரர்
3. எஸ் மஹிந்த தேரர்
4. ஆனந்த மைத்திரி தேரர்

43. கீழுள்ள உபகரணமும், அதனால் செயற்படுத்தும் வேலையையும் குறிக்கும் சரியான விடை




1. சுத்தியல் - ஆணி கழற்ற
2. தகடு வெட்டி – டின்களை வெட்டுதல்
3. உளி – சீவுவதற்கு
4. முடி திறப்பான் - திறப்பதற்கு

44. தலதா மாளிகை அமைந்துள்ள மாகாணம்

1. வடமத்திய மாகாணம்
2. வடமேல் மாகாணம்
3. மத்திய மாகாணம்
4. சபரகமுவ மாகாணம்

45. மின்குமிழை ஒளிரச் செய்யும் சந்தர்ப்பமாக அமைவது.



1. AB
2. BC
3. AD
4. AC

PIRASANNA
www.lkedu.lk

❖ படத்தில் காணப்படும் பிரசித்தி பெற்ற இடங்களை அடைப்புக்குள் தெரிந்து எழுதுக.

46. 

47. 

48. 

....

(சீகிரியா, தலதா மாளிகை, சந்திர வட்டக்கல், காலிக் கோட்டை)

❖ இலங்கைப் படத்தில் கீழுள்ள இடங்களை தெரிவு செய்து எழுதுக.

(அனுராதபுரம்/ திருகோணமலை/ யாழ்ப்பாணம்/ கொழும்பு)



49. .....

50. .....

51. .....

52. வாகனம் ஓட்டும் சந்தர்ப்பத்தின் போது பிழையான தகவலாக அமைவது.


1. வீதி சமிக்ஞைகளை அனுசரித்து ஓட்டுதல்
2. வெள்ளை தனிக்கோட்டில் முந்தி செல்லாமை.
3. மஞ்சள் கடவையின் நடுவில் வாகனங்களை நிறுத்துதல்.
4. மஞ்சள் கடவையில் முன் செல்லக்கூடாது.

❖ கீழுள்ள படங்களினால் குறிக்கப்படுபவற்றை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்து எழுதுக.

(எரிபொருள் நிரப்பு நிலையம்/ விமான நிலையம்/ இலங்கை மின்சார சபை/ தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை/ வீதி அபிவிருத்தி அதிகார சபை)

53. 

....

54. 

....

55. 

....

56. பயிர்ச்செய்கையை சேதமாக்கும் பூச்சிகளை தடுப்பதற்காக சூழலிலிருந்து பெறக்கூடிய ஒரு வழிமுறையாவது.

1. சேதனப் பசளை இடுதல்
2. இரசாயனப் பசளை இடுதல்
3. செவ்வந்திச் செடிகளை நாட்டுதல்
4. புல் பூண்டுகளை அகற்றுதல்

57.'வருணியின் காலை நாய் கடித்தது, உடனே செய்ய வேண்டியது.

1. நோயாளியின் பயத்தை நீக்குதல்
2. கடித்த நாயைப் பிடித்துக் கட்டிவைத்தல்
3. ஓடும் நீரினால் சவர்க்காரமிட்டு கழுவுதல்
4. கடித்த இடத்திற்கு கைம்மருந்து போடுதல்.


PIRASANNA www.lkedu.lk

58. அம்மா பலாக்காயை வெட்டி துப்புரவு செய்யும்போது அதன் பிசின் கைகளில் ஒட்டிக்கொண்டது. அதை அகற்ற அவர் பாவிக்கக்கூடியது.


1. நீர் 2. சவர்க்காரம் 3. பெற்றோல் 4. மண்ணெண்ணெய்

தரப்பட்டுள்ள உருவின் பெயர்களை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

(மின்சூள், காற்றாடி, காற்றுச்சுழலி, காற்றுத் திசைகாட்டி)



59.....



60.....

30X1=30புள்ளிகள்

PIRASANNA
www.lkedu.lk